தஞ்சை மாவட்டத்தில் அரிசன மாணவ விடுதிகள்

*** 304 வினா—திரு. என். கிட்டப்பா** : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1974-75 ஆம் ஆண்டில் தஞ்சை மாவட்டத்தில் எந்தெந்த இடங்களில் ஆதி திராவிட மாணவர்களுக்கு புதிய விடுதிகள் கட்டித்தர உத்தேசிக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : தலைவரவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள கீழ்க்காணும் பத்து இடங்களில் அரசினர் அரிசன மாணவர் விடுதிகளுக்கு கட்டிடங்கள் கட்டுவதற்கான இசைவளிக்கப்பட்டுள்ளது :—

1. திருவையாறு .
2. பாபநாசம் ;
3. கும்பகோணம் ;
4. பந்தநல்லூர் ;
5. மன்னார்குடி ;
6. கோட்டூர் ;
7. திருத்துறைப்பூண்டி ;
8. திருவாரூர் ;
9. திருக்குவளை ;
10. கொரடாச்சேரி ;

இதிலே முதல் ஐந்தும் அரிசன மாணவர்களுக்கும், பின்னால் கூறிய கோட்டூர், திருத்துறைப்பூண்டி, திருவாரூர், திருக்குவளை, கொரடாச்சேரி ஆகியவை பிற்பட்ட மாணவர்களுக்குமான கட்டிடங்கள் அமைத்தல்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, 1974-75 ஆம் ஆண்டில் தஞ்சை மாவட்டத்தில் பத்து இடங்களில் அரிசன நல விடுதிகள் கட்ட இருப்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் பெருமையோடு அறிவித்தார்கள். அதிலே ஒரு இடமாவது மாயூரம் தொகுதியில் கட்ட இடமளிக்கப்படவில்லை. நீண்ட கால கோரிக்கையை நிறைவேற்றும் முகத்தான் அந்தப் பகுதியில் இனிமேலாவது அத்தகைய விடுதிக் கட்டிடத்தைக் கட்டித் தர அரசு ஆலோசனையாவது செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1975 நவம்பர் 11]

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: தலைவரவர்களே இப்பொழுது இங்கே குறிப்பில் இருக்கின்ற பத்து இடங்களில் கட்டிடங்கள் கட்டுவதற்கான வேலைகள் துவக்கப்பட்டிருக்கிறது. அந்த வேலைகள் நடந்து அதற்குரிய காரியங்கள் நடந்து வருகின்றன. அது வேகமாக நடைபெற வேண்டுமென்பதற்காகத் தான் முதலமைச்சரவர்கள் முதலில் 40 ஹாஸ்டல்களின் கட்டிட வேலைகளை முடித்துவிட வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொல்லியிருக்கிறார்கள். வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

தீண்டாமை ஒழிப்புச் சட்டம்

* 305 வினா—திரு. வை. பாலசுந்தரம்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1974 ஆம் ஆண்டில் தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் எவ்வளவு பேர்?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: 1009.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவரவர்களே, 1967 ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் இந்தத் தீண்டாமை ஒழிப்பில் அரசு கவனம் செலுத்தி அதிகமான நபர்களைப் பிடித்து வருகிறது. இதைத் தீவிரப்படுத்தியதன் விளைவாக தீண்டாமை தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஒழிந்து வருகிறது. குறிப்பாக மேலும் இதில் தீவிரம் காட்டி ஒவ்வொரு தாலுக்காவிலும் இருக்கின்ற காவல் நிலையங்களில் இதற்கென்று ஒரு தனிப் பிரிவைப் போட்டு அரசு தீவிரம் காட்டுமா என்பதனை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: தலைவரவர்களே, இப்பொழுது 6 மாவட்டங்களில் இது அமல்படுத்தப்பட்டு வருகிறது, சிறப்பு காவல் படைகள் மூலம். ஆனால் பொதுவாக உள்ள காவல் துறையின் மூலமும் ஒவ்வொரு வட்டத்திலும் இதனுடைய அமைப்பு இருக்க வேண்டுமென்று உறுப்பினரவர்கள் விரும்புகிறார்கள். அதை நிதிநிலைமையைப் பொறுத்து பின்னால் அரசாங்கம் கவனிக்கும். ஆறு மாவட்டங்களிலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது. இந்தச் செயலில் சாதாரண போலீஸ்காரர்களும் பங்கெடுத்துக் கொண்டு